பக்கங்கள் 15 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## தலவாக்கலையில் இன்று குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஹொலிரூட் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அருகில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 02 திங்கட்கிழமை 15.04.2024 அதிர்வு 259

# பிரபாகரனுக்குப் பின்னர் ஒரு தலைமையை தமிழர் இன்னும் அடையாளம் காணவில்லை

## பொது வேட்பாளரில் அவர்கள் ஆர்வம் இல்லை என்று சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.றொசேரியன் லெம்பேட்)

**“வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பைப் பொறுத்த வரையில் அங்குள்ள தமிழர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர் ஒரு தமிழ்த் தலைமையை இன்னும் அடையாளம் காணவில்லை. எனவே, தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர்.”**



– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள தனது அலுவலகத்தில் இன்று காலை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழரசுக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது யாரை ஆதரிப்பது அல்லது தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து இதுவரை எவ்வித கலந்தாலோசனைகளையும் முன்னெடுக்கவில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து ஊடகங்களில் கருத்துக்கள் வெளிவருகின்றன. என்னைப் பொறுத்தமட்டில் அவர்கள் கூறுவதன் பிரதான காரணம் தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்தாலும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்கின்ற சிலரது கருத்துக்கள் நிலவுகின்றன.

எனது தனிப்பட்ட கருத்தாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது மிகவும் கடினமான விடயம்.

வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பைப் பொறுத்த வரையில் அங்குள்ள தமிழர்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர் ஒரு தமிழ்த் தலைமையை மக்கள் இன்னும் அடையாளம் காணவில்லை. காணவும் முடியாது என்பது என்னுடைய கருத்து.

எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு கட்சித் தலைவர் அல்லது பொதுவானவர்களையோ அடையாளம் காண்பது என்பது கடினமான விடயம்.

குறிப்பாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கு மக்கள் மத்தியில் போதிய வரவேற்பு இருப்பதாக 04▶

# யாழில் நீண்ட காலத்துக்குப் பின்னர் கொரோனோவால் பெண் ஒருவர் பலி

## பிரான்ஸில் இருந்து ஆயுள்வேத சிகிச்சைக்காக வந்தவரே சாவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்ட காலத்தின் பின்னர் ஒரு கொரோனா மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரான்ஸில் இருந்து ஆயுள்வேத சிகிச்சைக்காக வருகை தந்த அராலி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 62 வயது பெண்மணிக்கே இறப்பின் பின்னர் கொரோனா கண்டறியப்பட்டுள்ளது.

தொடர் காய்ச்சல், இருமல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விடுதியில் சேர்க்கப் 04▶





# 150 அடி பள்ளத்தில் வீழ்ந்தது வான்: சாவடைந்தோர் மூன்றாக அதிகரிப்பு

## புஸ்ஸலாவையில் சோகம்

(ஆ.ரமேஷ்)

புஸ்ஸலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பொட, கட்டுகித்துல பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வான் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

நுவரெலியாவில் வசந்தகாலக் கொண்டாட்டத்தைப் பார்வையிட வருகை தந்து, பின்னர் ரிதிகம பிரதேசத்தை நோக்கிப் பயணிக்கும் வழியிலேயே வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் குறித்த வான் வீழ்ந்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இரு பெண்கள், இரண்டு வயது குழந்தை, வான் உரிமையாளர் என அந்த வானில் ஏழு பேர் பயணித்துள்ளனர்.

இவர்களில் மொஹமட் அனிஸ் ஆதில் என்ற இரண்டு வயதான குழந்தை மற்றும் எஸ்.எல்.எம்.அமீர்தீன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஏனைய ஐவரும் படுகாயம் அடைந்த நிலையில் புசல்லாவை, வகுவப்பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அதில் மொஹமட் பீபீ (வயது 60) என்ற வயதான பெண் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார். ஏனையோர் கம்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் விபத்தில் உயிரிழந்த இரண்டு வயது குழந்தையின் தாயான ரிப்னா (வயது 30), குழந்தையின் தந்தை உட்பட வான் உரிமையாளர் மற்றும் மேலும் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் புஸ்ஸலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









# யாழில் வாகனங்கள் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

## போதைப்பொருள் வியாபாரிகள் அட்டகாசம்

**(ந.லோகதயாளன், எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் நகரில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடு பவரின் வாகனங்களைப் போதைப்பொருள் வியாபாரிகள் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

யாழ். நாவாந்துறைப் பகுதியில் வசிக்குத் நடமாடும் வர்த்தகர் வீட்டின் முன்னே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பட்டா மற்றும் ஓட்டோ ஆகிய இரு வாகனங்கள் மீதும் இன்று அதிகாலை 3 மணியளவில் பெற்றோல் குண்டு வீசியதில் இரு வாகனல்களும் முற்றாக எரிந்து நாச மாகியுள்ளன.

20 இலட்சம் ரூபா பெறுமதியான இரு வாகனங்களும் அப் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் ஒருவர், சிலருடன் சேர்ந்து தாக்குதலை மேற்கொண்டார் என்று பெயர் குறிப்பிட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிட்டுள்ள போதிலும் இதுவரை பொலிஸாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், பள்ளிவாசல் நிர்வாகம் ஒன்றில் இருந்து போதைப்பொருள் விற்பனைக்கு எதிராகக் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டமையே இந்தத் தீ வைப்பு நடவடிக்கைக்குக் காரணம் எனவும் வாகன உரிமையாளர் ஊடகங்களிடம் தெரிவித்தார். வீடுகளுக்கு முன்பாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதே அவை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# மதுபோதையில் பஸ்ஸை செலுத்திய சாரதி கைது

**(வவுனியா நிருபர்)**

புத்தாண்டு தினத்தில் மதுபோதையில் தனியார் பஸ்ஸை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டையொட்டி கடந்த ஒரு வாரமாக நாடு முழுவதும் போக்குவரத்துப் பொலிஸாரால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்திலும் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தமையுடன் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டில் தனியார் பஸ் சாரதியைப் பொலிஸார் கைது செய்ததுடன், பஸ்ஸையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.



சாரதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# வவுனியாவில் யானை தாக்கி ஒருவர் காயம்

**(கே.வசந்தன்)**

வவுனியா, மாமடுப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மாமடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு தினமான நேற்று மாலை வவுனியா, மாமடு – கள்ளிக்குளம் வீதியில் நபர் ஒருவர் பயணித்தபோது வீதியில் நின்ற யானை மேற்படி நபர் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

பின்னர் அந்த வீதியால் சென்றோர் தாக்குதலுக்குள்ளான நபரை வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாமடுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாமடு – கள்ளிக்குளம் வீதியில் உள்ள பல காணிகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ள போதும், அவ்வீடுகளில் பலரும் குடியிருக்காமையால் அப்பகுதி பற்றைக் காடுகளாக மாறியுள்ளதுடன், காட்டில் இருந்து வரும் யானைகள் அப்பற்றைக்காடுகளின் ஊடாக வீதிக்கு வருகை தருகின்றன என்றும், தினமும் அப்பகுதியில் நடமாடித் திரிவதுடன் வீதியில் செல்வோரைத் தாக்க முயற்சிக்கின்றன என்றும் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்.



# இருவேறு மோதல்களில் 7 பேர் காயம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவில் இருவேறு மோதல் சம்பவங்களில் ஏழு பேர் காயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு பிறப்பையொட்டி நட்பு ரீதியாக மது அருந்திக் கொண்டிருந்த வேளையில் நொச்சிக்குளம் – சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த 4 பேர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்த நிலையில் இன்று அதிகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

20 - 25 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இளைஞர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் மஹதிவுல்வெவ பிரதேசத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தனது குடும்பத்தாருடன் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தபோது சக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன்போது காயமடைந்த தாயும் மகனும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர் பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## யாழில் நீண்ட...

பட்ட பெண்மணி ஒருவர் இருநாள் சிகிச்சையின் பின்னர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தபோதும் இறப்பிற்கான காரணம் கண்டறியப் படவில்லை.

இதன் காரணமாக மேற்கொண்ட மரண விசாரணையின்போது மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதோடு உடலம் உறவுகளிடம் ஒப்படைக்கப்பட்டு உறவுகளால் உடல் தகனம் செய்யப்பட்டது. அதன் பின்னரே பிரேத பரிசோதனையின்போது பெறப்பட்ட மாதிரியில் இருந்து கொரோனா கண்டறியப்பட்டுள்ளது.

## பிரபாகரனுக்குப்...

நான் காணவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாகத் தமிழ் மக்கள் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படும்போது – வேட்பாளர்கள் தேர்தலில் நிறுத்தப்படும்போது அந்த நேரத்தில் கட்சி ஒரு தெளிவான முடிவை எடுக்கும்.” – என்றார்.

மேலும், கச்சதீவு விவகாரம், இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் குறித்தும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கருத்துத் தெரிவித்தார்.

## தலவாக்கலையில்...

இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

ஹொலிரூட் தோட்டத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் காளிமுத்து (வயது 61) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸ் நடவடிக்கை அதிகரிக்கும்

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



நாட்டில் அதிகரித்து வரும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிராகப் பொலிஸாரின் நடவடிக்கைகள் இரட்டிப்பாகும் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டுக் கொழும்பு மாவட்டத்தில் போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளை நேற்று (14) சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குற்றம் மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ளன.

புதுவருடத்தின் பின்னர் பாதாள உலக குழு நடவடிக்கையை ஒடுக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.

இது குறித்த மிக பெரிய ஆற்றல் பொலிஸாரிடம் உள்ளது.

குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் தொடர்பாக ஒரு சிறிய அளவு மட்டுமே வெளியிடப்பட்டது. இதனை இரட்டிப்பாக்குதல் மற்றும் மும்மடங்காக அதிகரிப்பதன் மூலம் விரைவாக நாட்டை சீர்படுத்தலாம். -என்றார்.

# வீடொன்றில் ஏற்பட்ட தீ; பெண் ஒருவர் உயிரிழப்பு!



திம்புலபதன - கொட்டகலை பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டின் அறையொன்றில் தீ பரவியதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொட்டகலை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் என தெரிவிக்கப்படுகிறது.

தீக்காயங்களுக்குள்ளான பெண் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


இந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகருக்கு எதிராக வழக்கு

நாடளாவிய ரீதியில் பண்டிகைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொருள்களில் விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் இவ்வாறு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று அதிகாரசபையின் விசேட விசாரணை பணிப்பாளர் சஞ்ஜய இரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 7 ஆயிரத்து 627 வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.



# டெங்கு நோயின் தாக்கம் நாட்டில் பரவலாக அதிகரிப்பு

நாட்டில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரையான காலப் பகுதிக்குள் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

ஏப்ரல் 13 ஆம் திகதிவரை இலங்கையில், மொத்தம் 21 ஆயிரத்து 28 வழக்குகள் பதிவாகியுள்ளன. அதே சமயம், அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

அந்தவகையில், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குள் கொழும்பில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 527 ஆகக் காணப்படுகின்றது.

மாகாண ரீதியில் மேல் மாகாணத்தில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 7 ஆயிரத்து 547 வழக்குகள் பதிவாகியுள்ளன.

அதேபோல் மாகாண ரீதியாக ஏப்ரல் மாதத்தில் முதல் 13 நாள்களுக்குள் அதிகபட்சமாக 989 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இலங்கையின் பல பகுதிகளில் கடந்த சில நாள்களாக கணிசமான மழை பெய்துள்ள நிலையில் இந்தத் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

டெங்குக் காய்ச்சலைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்கவும், நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்கவும் சுகாதார அதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் கொரோனா

மீண்டும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி இருக்கின்றது கொரோனா வைரஸ்.

கடந்த வாரம் குருநாகல் பகுதியில் இரண்டு பெண்களின் மரணத்திற்கு அதுவே காரணம் என்று செய்தி வெளியான போதே நாட்டில் சிறிது பதற்றம் ஏற்பட்டது உண்மைதான்.

இப்போது, கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட ஒரு மரணத்துக்கும் கொரோனாவே காரணம் என்ற செய்தி ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பது பதற்றத்தை அதிகரிக்கக் கூடும்.

இதில் பதற்றப்படுவதற்கு ஒன்றுமில்லை. கொரோனா தொடர்பான கடந்த கால எமது அனுபவம் அத்தகைய திகிலை - பயப் பீதியை - தந்து நின்றாலும் கொரோனா வைரஸை மனித விஞ்ஞான ஆற்றல் கணிசமான அளவு எதிர்கொண்டு நிமிர்ந்திருக்கின்றது என்ற நம்பிக்கை நமக்கு உறுதி தந்து நிற்கின்றது.

கொரோனா தாக்கத்தின் ஆரம்பத்தில் - 2020இல் - இந்தப் பெருந்தொற்றின் விளைவுகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் மனித குலம் பரிதவித்து நின்றது உண்மைதான். எனினும் குறுகிய காலத்தில் மனித குலம் ஒன்று பட்டு சுதாகரித்து எழுந்து, தன் ஆற்றல் மூலம் கொரோனாவுக்கு முகம் கொடுத்து நிமிர்ந்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

கொரோனா வைரஸை எதிர்கொள்வதற்கான தமது விஞ்ஞான - மருத்துவ - சுகாதார - ரீதியான ஆற்றலை மனித இனம் குறுகிய காலத்தில் அறிவார்ந்த முறையில் மேம்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், உலகளாவிய ரீதியில் அதை பகிர்ந்து, ஒன்றுபட்டு கொரோனா வைரஸின் எழுச்சியை அடக்கியது என்பது நினைவில் நிறுத்தப்பட வேண்டியது.

கொரோனா வைரஸின் திரிவுகள் மாறுபாடடைந்து ஒவ்வொரு வடிவத்தில் தலை தூக்குகின்றன. ஆங்காங்கே மனித இனத்துக்குத் தொல்லை தருகின்றன. ஆயினும் மனித இனம் களைத்து விடவில்லை. ஒவ்வொரு மாறுபாட்டுக்கும் புதிய புதிய எதிர்ப் பொருள்களை - தடுப்பூசிகளை - மருந்துகளை - அபிவிருத்தி செய்து, கொரோனா வைரஸை உலகளாவிய ரீதியில் அடக்கிக் கட்டுப்பாட்டில் வைப்பதில் அது தொடர்ந்து வெற்றிக் கொடி நாட்டியே வருகின்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகள், தடுப்பூசிகள், எதிர்ப்பு மருந்துகள் மூலமே ஆரம்பத்தில் வந்த கொரோனா வைரஸ்களை நாம் எதிர்கொண்டு சமாளித்தோம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

இப்போதைய கொரோனாப் பரவலை ஆரவாரம் இல்லாமல் - பதற்றப்படாமல் - அமைதியாக எதிர் நடவடிக்கைகள் மூலம் நாம் சமாளிக்க வேண்டும். அது இயன்ற காரியமே.

முன்னைய நிலைமை போன்று சமூக நெருக்க விடயங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக வயோதிபர்கள், சிறு பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார் விடயங்களில் அவதானம் அவசியம்.

முன்னர் கொரோனாத் தொற்று வந்த போது தடுப்பூசி மூலமே பெருமளவில் அதனைச் சமாளித்தோம்.

மூன்று, நான்கு தடவைகள் தடுப்பூசி எடுத்தவர்கள் கூட அவற்றைக் கடைசியாக எடுத்து சுமார் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இவ்வளவு காலத்துக்குப் பின்னரும் அந்தத் தடுப்பூசி மூலமாக எதிர்ப்புச் சக்தி தாக்குப் பிடிக்குமா என்பதை அறிவியல் துறையினர் கண்டறிந்து வழி சொல்ல வேண்டும்.

தேவையானால் அடுத்த சுற்றுத் தடுப்பூசி போட வேண்டுமாயின் அதையும் நாம் முன்னெடுக்க வேண்டும்.

தேசிய ரீதியில் தடுப்பூசிகளை வழங்குவதில் நமக்கு இப்போது தேர்ந்த அனுபவம் உண்டு.

அரசுத் தலைமையும், சுகாதார துறையும் இது தொடர்பில் தீர்மானங்களை விரைந்து எடுத்து, உரிய பரிந்துரைகளை உரிய சமயத்தில் முன்வைத்துச் செயல்பட வேண்டும்.

முன்னைய கொரோனா நெருக்கடி சமயம் தடுப்பூசி எடுக்காமலேயே அந்தக் கண்டத்தை தாண்டியவர்களும் இருக்கின்றார்கள். அந்த அதிர்ஷ்டம் எப்போதும் பாதுகாக்கும் என்று நம்பி இருப்பதில் அர்த்தமில்லை.

கொரோனாப் பரவல் தொடர்பில் நாம் உஷாராக இருக்க வேண்டும். 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்பார்கள். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சவேண்டும் தான். ஆனால் அதற்காக நாம் பதற்றப்படத் தேவையில்லை.

இந்த விடயத்தில் சுகாதார - மருத்துவ அதிகாரிகளின் மருத்துவ, விஞ்ஞான ரீதியான வழிகாட்டல்களை ஏற்று, பின்பற்றி நடப்பதன் மூலமே இந்தத் தடவையும் கொரோனாப் பாதிப்பை வெற்றிகரமாக நாம் முறியடித்துத் தாண்ட முடியும்.

# பேர்த் மாநகரில் நூல் வெளியீடு!

மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த மாநகரில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியைக் கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.




தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் முத்திரை பதித்துக் கொண்டவர்.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" வெளியீட்டு விழா எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மேற்கு ஆஸ்திரேலியா, பேர்த் மாநகரில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீடு, 1 ஹில் வியூ பிளேஸ், பென்ட்லி, மேற்கு ஆஸ்திரேலியா என்னும் முகவரியல் அமைந்துள்ள ஹில்வியூ இன்டர்கல்ச்சுரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில் நடைபெறும்.

மூத்த தமிழ் எழுத்தாளர் டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்த நூல் வெளியீடு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்த நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவணக் காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றுவார்.

அத்துடன் டாக்டர். சி. பாஸ்கரநாதன் இந்நூல் பற்றி சிறப்புரை ஆற்றுவார். நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும்.





# கிழக்கிலங்கையில் முதன்முறையாக விழிப்புணர்வு உதைப்பந்தாட்ட போட்டி!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையில் முதன் முறையாக "போதையற்ற நாடு சௌபாக்கியமான தேசம்" எனும் தொனிப் பொருளில் சிறுவர்களூடாக விழிப்புணர்வு உதைப்பந்தாட்டப் போட்டிகள் திராய்மடு விளையாட்டு மைதானத்தில் யூபா சிறுவர் கழகத்தின் இயக்குனர் ப.தினேஸ் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி. ஈஸ்பரன் கலந்து கொண்டார்.

சிறுவர்களூடாக சமூகத்தை விழிப்பூட்டும் நோக்கில் இந்த உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.



இந்தப் போட்டியில் 11 விளையாட்டு அணியினர் கலந்து கொண்டு திறமைகளை வெளிக்காட்டினர்.

இதன் போது வெற்றியீட்டிய அணியினருக்கு சான்றிதழ்களும், வெற்றிக் கிண்ணங்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரி.மதிராஜ், நரம்பியல் விஞ்ஞானி எம். கீதாஞ்சன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் ஆவணப் படங்கள் வெளியீடு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் பத்து ஆவணப் படங்கள் யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட்டன.

தமிழரின் பாரம்பரியமாக விளங்கும் தவில் இசைக்கருவியின் உருவாக்கமும் நுட்பமும் பற்றிய பதிவான 'தவில் கொட்டு', காரைநகரின் ஊரி கிராமப் பெண்கள் தமது சொந்தக் கால்களில் நின்று மீன்பிடித் தொழிலாற்றுவது பற்றிப் பேசும் 'அலைமகள்', தீயில் எரிந்து போன லயன் குடியிருப்புகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கிடைக்கும் எனக் காத்திருக்கும் மலையக மக்களின் துன்பங்களைப் பதிவு செய்யும் 'தணல்', மட்டக்களப்பிலுள்ள வேப்பவெட்டுவானில் செங்கல் கைத்தொழில் தயாரிப்பு மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் 'கல்வாடி', மலையகப் பெண்கள் மாதவிடாய்க் காலங்களிலும் மலைகளில் ஏறிக் கொழுந்து பறிப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி பேசும் 'கசிவு', தற்சார்பு வாழ்க்கைமுறை ஊக்குவிப்புப் பற்றிச் சிலாகிக்கும் 'உயிர்மை', தமிழர் கட்டட மரபின் பொக்கிஷங்களில் ஒன்றைக் கால ஆவணப்படுத்தும் 'நாற்சார் வீடுகள்', கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் பணிச் சுமைகளை வெளிக்காட்டும் 'காவலின் காயங்கள்', மலையக மக்களின் நில உரிமை பற்றிய சவால்களைப் பேசும் 'நிலம்', வயல் வெளிகளில் இராக் காவல் காக்கும் விவசாயிகளின் வாழ்வியலைப் பதிவு செய்த 'உறங்கா விழிகள்' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

இந்த ஆவணப்படங்கள் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் எண்மியக் கதைசொல்லல் கற்றலின் பெறுதிகளாக அமைவதும், வருடந்தோறும் ஆவணப் படத் திரையிடலை ஊடகக் கற்கைகள் துறை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



# கர்ப்பிணித் தாய்மாருக்கு பொருள்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ.வீரசிங்கவின் ஏற்பாட்டில் தமிழ் சிங்கள புது வருடத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான குழந்தைகளுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கற்பிணித் தாய்மார்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.





# ஈரான்-இஸ்ரேலியப் போர்: இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள்!



கலாநிதி. ஏ.எல்.எம்.அஸ்லம்.

ஈரான்– இஸ்ரேல் போரின் விரிவாக்கம் மற்றும் ஆபிரிக்காவின் தெற்கு கடற்கரையில் கப்பல்களை மாற்றியமைப்பது கப்பல் செலவுகளை நூறு சதவீதத்துக்கும் மேலாக அதிகரிக்கும். சர்வதேச விலையேற்றம் இலங்கையின் பொருளாதாரத்துக்குக் கடுமையான நெருக்கடிகளை ஏற்படுத்தும். எரிபொருள், உணவு, உரம், மூலப்பொருள் இறக்குமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது. சர்வதேச விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்து பொருள்களின் கிடைப்பனவுத் தன்மை மற்றும் செலவுகள் மோசமாகப் பாதிக்கப்படும். நமது நாட்டின் இறக்குமதி செலவுகள் விண்ணை முட்டும்.

சுருக்கமாக இந்தப் போர் நீடித்தால் இலங்கை மற்றுமொரு பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். பல மாதங்களாக தொடரும் காசா போர் தீவிரமடைந்து பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளை மூழ்கடித்து வருகின்ற நிலையில் ஈரான்– இஸ்ரேலிய போர் ஒரு பிராந்திய போராக மாறி சர்வதேச கப்பல் மற்றும் வர்த்தகத்தை சீர்குலைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஏற்கனவே இஸ்ரேல்– காசா போரால் செங்கடல் வழியாக கப்பல் போக்குவரத்து ஆபத்தானதாகி விட்டதால், மீணடும் ஈரான்– இஸ்ரேலியப் போர் தீவிரமடைந்ததன் உடனடி தாக்கம் கப்பல் போக்குவரத்தில் பாரிய இடையூறு ஏற்படும்.

செங்கடல் வழியைப் பயன்படுத்தி கப்பல்கள் மீது ஏமனின் கவுதி படைகள் நடத்திய தாக்குதல்கள், ஆப்பிரிக்காவின் தெற்கு முனை வழியாக செங்கடலைப் பயன்படுத்தி கப்பல்களை திருப்பி அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது புதிய போரால் மேலும் திவிரமடையலாம் என்று புவியியல் சார் பொருளியல் வல்லுனர்கள் எதிர்வு கூறுகின்றனர். இது எரிபொருள், உரம் மற்றும் உணவு இறக்குமதி செலவுகளை அதிகரித்து சர்வதேச விநியோகச் சங்கிலியை சீர்குலைக்கும். சர்வதேச வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்படலாம்.

ஆபிரிக்காவின் தெற்குக் கரையோரத்தில் கப்பல்களை ஆசியாவுக்குத் திருப்பி அனுப்புவது கப்பல் செலவுகளை உடனடியாக 100 சதவிகிதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இது புதிய போரின் எதிர்வினையால் மேலும் அதிகரிக்கலாம். எரிபொருள், உணவு மற்றும் உர விநியோகச் சங்கிலிகள் சீர்குலைந்துள்ளன. இதன் விளைவாக சர்வதேச பொருள்களின் விலைகள் தாறுமாறாக உயரும். நாட்டின் இறக்குமதி விநியோகம் மற்றும் செலவுகள் பாதிக்கப்படும்.



இறக்குமதி விலை அதிகரிப்பு என்பது மக்கள் எதிர்க்கும் மதிப்பு கூட்டப்பட்ட வரி காரணமாக ஏற்படும் செலவுகள் அதிகரிப்பதை விடவும் இறக்குமதி விலைகளின் சதவீதமாக இறக்குமதி வரிகள் அதிகரிப்பதனைக் குறிக்கும்.

பீப்பாய் ஒன்றுக்கு 80 அமெரிக்க டொலர்களாக இருந்த எண்ணெய் விலை எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பால் உடனடியாக உயரவில்லை. அமெரிக்காவிலும் கனடாவிலும் அதிகரித்த எண்ணெய் உற்பத்தி விலையை உறு

தொடர்ச்சி▼

# ஈரான்-இஸ்ரேலியப் போர்:

# இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள்!

தொடர்ச்சி▲

திப்படுத்தியது. இருப்பினும் எண்ணெய் விலைகள் ஒரு பீப்பாய் சுமார 90 அமெரிக்க டொலராக ஆக அதிகரிக்கக்கூடும். ஏனெனில் விநியோகம் குறைக்கப்படுவதற்கு பதிலாக அதிக கப்பல் செலவுகள் ஆகும்.

மறுபுறம் ஈரான் சில நேரங்களில் தமது எண்ணை விநியோகத்தை மட்டுப்படுத்த முனையும்போதும் இந்த நிலை தோன்றலாம். இருப்பினும் வரும் வாரங்களில் பெட்ரோலியப் பொருள்களின் விலை கடுமையாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருள் விலை அதிகரிப்பு, குறிப்பாக உரம், கோதுமை, மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஆகியவற்றின் காரணமாக பல அத்தியாவசிய இறக்குமதிகளின் விலைகளும் அதிகரிக்கும். இலங்கையைப் பொறுத்த மட்டில் 2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் காலத்தில் உரத்தின் விலை அதிகரிப்பு அவ்வளவு ஆராக்கியமானதல்ல.

எனவே ஈரான்-இஸ்ரேலியப் போர் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய விளைவுகள் ஏற்படுத்தலாம் மோதலின் விரிவாக்கம் மற்றும் அதன் நீடிப்பு உலகப் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் மற்றும் இலங்கையின் பலவீனமான பொருளாதாரத்திற்கு தாங்க முடியாத கஷ்டங்களை ஏற்படுத்தும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பாக வெளிநாட்டு நிதியத்தின் மீதான தாக்கம் பேரழிவை ஏற்படுத்தும். இறக்குமதி செலவுகள் கடுமையாக உயரும் மேலும் வர்த்தக பற்றாக்குறையை அதிகரிக்க ஏற்றுமதி குறையும். அத்தியாவசிய இறக்குமதிச் செலவுகள் மலிவு விலைக்கு மேல் உயரலாம். நாடு மற்றொரு கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் தள்ளப்படலாம்.

இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு வாழ்க்கைச் செலவுகள் மற்றும் பல்வேறு வகையான பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திச் செலவுகள் ஆகியவற்றின் மீது அடுக்கடுக்கான தாக்கத்தை ஏற்படுத்தும். இது போக்குவரத்துச் செலவுகள் சமையல் செலவுகள் மற்றும் அதையொட்டி, பொது விலை மட்டத்தை அதிகரிக்கும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவின் விலை அதிகரிக்கும். இது சுழல் பண வீக்கத்தின் ஒரு தீய சுழற்சியைத் தூண்டும்.

எரிபொருள், உரம் மற்றும் போக்குவரத்துச் செலவுகளின் அதிகரிப்பு உணவுப் பொருள்களின் உற்பத்திச் செலவுகளை அதிகரித்து பணவீக்க அழுத்தங்களைச் சேர்க்கும். இதையடுத்து உற்பத்திச் செலவுகளும் பல்வகை பொருள்களின் விலையும் பெரும்பாலான மக்களின் கொள்வனவு சக்தியை தாண்டி உயரும். இதனால் வேலையில்லா திண்டாட்டம் மற்றும் வறுமையும் ஏற்படும்.

நாட்டின் வர்த்தக சமநிலை மீதான தாக்கம் நீடிக்க முடியாததாக இருக்கலாம். குறிப்பாக பெட்ரோலியம் மற்றும் எரிவாயு விலைகள் அதிக அளவில் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதால் இறக்குமதி செலவு கடுமையாக உயரும். சந்தேகத்துக்கு இடமின்றி அதிக விலை காரணமாக பெட்ரோலியம் மற்றும் டீசல் தேவை குறையும் ஆனால், குறைந்த இறக்குமதி இருந்தாலும் இறக்குமதி செலவு அதிகரிக்கும். மறுபுறம் உலக மந்தநிலை காரணமாக கடந்த ஆண்டைவிட ஏற்றுமதி மேலும் சுருங்க வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டு பணம் செலுத்துதலின் இரண்டு பலம் எனக் கொள்ளப்படும் வெளிநாட்டு தொழிலாளர்களின் உள்நோக்கிய பணம் அனுப்புதல் மற்றும் சுற்றுலாவிலிருந்து கிடைக்கப்பெற்ற வருவாய் என்பன கிட்டத்தட்ட 8 பில்லியன் அமெரிக்க டாலர்களைக் இலங்கைக்குள் கொண்டு வந்து சுமார் 4.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற பரந்த வர்த்தகப் பற்றாக் குறையைத் துடைத்தெறிய இவை உதவின. இதன் விளைவாக வெளிக் கையிருப்பு 4.96 பில்லியன் அமெரிக்க டொலராக ஆக அதிகரித்தது. தற்போதைய உலகளாவிய நிலைமைகளின் அடிப்படையில் மேற்கு ஆசியாவின் தற்போதைய பாதுகாப்பின்மையால் இலங்கையின் இந்த வெளிப்புற நிதி ஆதாரங்கள் பாதிக்கப்படும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

உள்நோக்கிய பணப்பரிமாற்றங்களில் பாதிக்கும் மேலானது மேற்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து வருவதாகும. மோதல் தீவிரமடைந்தால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு இந்தப் பகுதி பாதுகாப்பற்றதாகி விடும். இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கின் அரபு நாடுகளில் இருந்து இருந்து தொழிலாளர்கள் திரும்பி வருவதற்கு முயற்சிப்பார்கள். இது அவர்களிடமிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை மோசமாக பாதிக்கும். தென் கொரியா, ஜப்பான் மற்றும் மேற்கத்திய நாடுகள் போன்ற நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தின் மற்ற பாதி பாதிக்கப்பட வாய்ப்பில்லை. இன்னும் பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் குறைவது தவிர்க்க முடியாத ஒன்று வர்த்தகப் பற்றாக் குறை விரிவடையும்.

வெளிப்புற நிதிகளுக்கான வலிமையின் மற்ற ஆதாரம் சுற்றுலா ஆகும் இது விமானப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் மற்றும் விமானப் பயணத்தின் அதிக செலவுகளால் பாதிக்கப்படலாம். கடந்த ஆண்டு சுற்றுலாத் துறையில் இருந்து 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வருவாய் ஈட்டியது கோவிட் மற்றும் விருந்தோம்பல் நிலைமைகளிலிருந்து பின்னடைவைக் கொண்டிருந்த சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சியை இது சுட்டிக்காட்டிய போதும் ஈரான்-இஸ்ரேல் போர் இந்த நிலைமையை மேலும் பாதிக்கும். ஏனெனில் போர் வலயத்தின் ஊடாக விமானப் போக்குவரத்துக்கு ஏற்படும் ஆபத்துகள் மற்றும் எரிபொருள் விலை உயர்வால் விமானக் கட்டணங்கள் அதிகரிப்பது சுற்றுலாத்துறைக்கு கடும் பின்னடைவை ஏற்படுத்தும்.

தொடர்ச்சி▼

# பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கைதிகளைப் பயன்படுத்த முடிவு!

## இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை – சிறைச்சாலைகள் திணைக்களம் ஒப்பந்தம்



தேசிய பொருளாதார வளர்ச்சிக்காக சிறைக் கைதிகளின் திறனைப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்ட ஒரு புதிய முன்முயற்சியில், இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச்சபை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன மற்றும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரான கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோரால் இந்தக் கூட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

சிறையிலுள்ள தனிநபர்களின் உழைப்பை சமூகம் எவ்வாறு நோக்குகிறது மற்றும் பயன்படுத்துகிறது என்பதில் ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் குறிக்கும் வகையில் இது அமைந்துள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேதாஷ ராஜபக்ஷ தலைமையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் வைத்தியர் சாரங்க அலகப்பெரும மற்றும் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் துஷார உபுல்தெனிய ஆகியோரிடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ், கைதிகளுக்கு இலங்கையின் உற்பத்தித் துறைக்கு இன்றியமையாத உற்பத்தி செயல்முறைகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

இந்த நடவடிக்கை கைதிகளுக்கு தொழில் பயிற்சி மற்றும் மதிப்புமிக்க திறன் சான்றிதழை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. அவர்களின் தண்டனைக் காலத்தில் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்பையும் இது வழங்குகிறது.

கைதிகளுக்குத் தொழில்முனைவோர் பயிற்சியை அளிப்பதன் மூலம், கைதிகளிடையே உற்பத்தித்திறன் மற்றும் பங்களிப்பின் உணர்வை வளர்ப்பதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் முன்னாள் கைதிகளுக்கு திறமையான தொழிலாளர்கள் அல்லது தொழில்முனைவோராக சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்க வழிகளைத் திறக்கிறது, அதன் மூலம் அவர்களின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கிறது.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டம் இலங்கை முழுவதும் மஹர, வட்டரெக, குருவிட்ட, வீரவில, மீதிரிகல, பல்லன் சேனை, பல்லேகெலை, அநுராதபுரம், கந்தேவத்தை, அகுனகொலபலஸ்ஸ மற்றும் பதுளை உள்ளிட்ட 11 இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தம், சிறையில் அடைக்கப்படாத தொழிலாளர்களை நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டத்துடன் தொடர்புடையது.

## ஈரான்-இஸ்ரேலியப் போர்:

# இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள்!

தொடர்ச்சி▲

மறுபுறம், ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து தப்பிச் செல்லும் மக்கள் மற்றும் பாதுகாப்பைத் தேடும் பணக்கார அரேபியர்கள் சுற்றுலாவை மேம்படுத்த முடியும். மேலும் கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியா மற்றும் கிழக்கு ஆசியாவில் இருந்து வருகின்றனர். அவர்கள் அடுத்த ஆண்டு சுற்றுலா வருவாயில் நிலையானதாக இருக்க முடியும்.

மேற்கு ஆசியாவில் விரிவடையும் போர், நாட்டின் வெளிப்புற நிதியை மோசமாகப் பாதிக்கலாம் மற்றும் பொருளாதாரம் மற்றும் மக்கள் மீது தாங்க முடியாத நிதிச் சுமைகளைக் குவிக்கலாம். அத்தியாவசியப் பொருள்களின் அதிக இறக்குமதிச் செலவுகள் நாட்டின் கொடுப்பனவு சமநிலையை நெரித்து, கையிருப்புகளை நீடிக்க முடியாத அளவிற்கு அரித்துவிடும். இறக்குமதி விலைகளில் கூர்மையான அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதியில் மேலும் சரிவு ஆகியவை வர்த்தக பற்றாக்குறையை விரிவுபடுத்தும். இது செலுத்தும் சமநிலையை கஷ்டப்படுத்தும்.

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணம் கடந்த ஆண்டு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என்று நம்புகிறோம். மேலும் சுற்றுலாப் பயணிகளின் வருமானம் தொடர்ந்து எழுச்சியைத் தொடரும் மற்றும் சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும். ஏன்றும் எதிர்பார்க்கிறோம். இவை ஆரான- இஸ்ரேல் போரின் காரணமாக வெறும் கானல் நீராகிவிடும். எவ்வாறாயினும். இந்த இரண்டு ஆதாரங்களும் பிராந்தியத்தில் போரின் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்படலாம் என்பதே உண்மை.

வளைகுடாப் பிராந்தியத்தில் யுத்தம் ஓய்ந்து பிராந்தியத்தின் பாதுகாப்பின்மையை மீட்டெடுக்காவிட்டால் இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் பயங்கரமானதாக இருக்கும்.

# அம்பாறையில் மின்வேலி பராமரிப்பு விழிப்புணர்வு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பண்டாரதுவ கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியுடன் மின்சார வேலிகளை திறம்பட பராமரிப்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடைபெற்றது.

பண்டாரதுவ கிராமம் காட்டு யானைகளின் தாக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் நடவடிக்கைகள் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஹெல்ப் ஸ்ரீ லங்கா ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காலை அமர்வில் குடிமைப் பாதுகாப்புத் துறையின் காவலர்களால் நடத்தப்பட்ட பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த 80இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கிராம விவசாயி அமைப்புகளின் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி இடம்பெற்றது. நல்லிணக்கத்துடன் வாழ்வது மற்றும் மனித யானைகள் அமைதி என்ற தலைப்பில் வீடு வீடாக பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது.

# உணவுப் பாதுகாப்பு குறித்த விதிகளை கடைப்பிடிக்கத் தவறினால் நடவடிக்கை

## சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் தெரிவிப்பு

(றியாஸ் ஆதம்)

நுகர்வோருக்கு தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுகளை வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம். உவைஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக் கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வது உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்து மக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்குவதற்காகும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்கு உரிய சட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காது அலட்சியமாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக் கையாளும் நிறுவனங்களில் காணப்படும் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பில் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு கடந்த சில தினங்களாக பொத்துவில் பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

நேரடியாக உணவைக் கையாளும் நிறுவனங்களும் அதில் வேலை செய்பவர்களும் ஒரு மாத காலப் பகுதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும். அத்துடன் வேலை செய்பவர்கள் தமக்கு உரிய மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சுகாதாரமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உணவுகளாலும், பிழையான உணவுப் பழக்கத்தாலுமே இன்று அதிகமானோர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர்.



உணவுகளைக் கையாளும் மற்றும் அவற்றை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பொது மக்களுக்குச் சுகாதாரமான உணவுகளை வழங்கும் பொருட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.- என்றார்.

# தொழில்முனைவோர் ஆலோசகர்களுக்கு கைத்தொழில் அபிவிருத்திப் பயிற்சி




தொழில்துறை தொழில்முனைவோர் ஆலோசகர்களுக்கு முதன் முறையாக இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி வாரியம் பயிற்சியை ஆரம்பித்துள்ளது.

தொழில் முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க நகர்வாக, இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது தொழில் முயற்சியில் ஆலோசகர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு புதுமையான திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த முன்னோடி முயற்சியானது ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தின் மூலம் உலக சந்தையில் நாட்டின் நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இரத்மலானையில் உள்ள நீர் மற்றும் சுகாதாரத்துக்கான சிறப்பு மையத்தில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் வைத்தியர் சாரங்க அலகப்பெருமவினால் இந்த முயற்சி வெளியிடப்பட்டது.

# புத்தாண்டு விளையாட்டு விழா

(வி.ரி. சகாதேவராஜா)

தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு கல்லடி இராம கிருஷ்ண மிஷன் சிறுவர், சிறுமியர் இல்ல மாணவர்களின் சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா இடம் பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பரிசுகளை வழங்கினார்.



# மாவட்டக் கிரிக்கெட் அணிக்கு கோணேஸ்வரா மாணவர் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீகோணேஸ்வரா கல்லூரி மாணவர்கள் இருவர் திருகோணமலை மாவட்ட கடினப்பந்து கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீகோணேஸ்வரா கல்லூரியில் இருந்து 19 வயதுக்கு உட்பட்ட திருகோணமலை மாவட்ட கடினப்பந்து கிரிக்கெட் அணிக்கு உயர்தர கணிதப் பிரிவைச் சேர்ந்த செல்வன். லி.துஷாந் , உயர்தர வர்த்தக பிரிவைச் சேர்ந்த செல்வன். நி.ஆதிஸ் ஆகிய இரு மாணவர்களுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் நாளை மறுதினம் மாலை முடிவு

## வெள்ளியன்று வாக்குப் பதிவு நடக்கும்



சென்னை,ஏப்.14

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வரும் வெள்ளியன்று – 19 ஆம் திகதி – நடைபெறும் நிலையில், தேர்தல் பிரசாரம் நாளை மறுதினம் புதன்கிழமை மாலையுடன் முடிவடைகிறது.

இன்று நெல்லையில் பிரதமர் மோடியும், சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இருவரும் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இறுதிக்கட்டப் பிரசாரத்தில் அரசியல் கட்சி தலைவர்கள் ஈடுபட்டுள்ளமையால் அரசியல் களம் பரபரப்பாகி உள்ளது.

**நெல்லையில் இன்று பிரதமர் மோடி**

அதன்படி இன்று (திங்கட்கிழமை) 8 ஆவது முறையாக தமிழகம் வரும் பிரதமர் நரேந்திர மோடி, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே அகஸ்தியர்பட்டியில் நடைபெறும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பேச இருக்கிறார்.

திருவனந்தபுரத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று விட்டு இராணுவ ஹெலிக்ப்டர் மூலம் மாலை 4.10 மணிக்கு அம்பை அகஸ்தியர்பட்டியில் உள்ள தனியார் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலி இறங்கு தளத்துக்கு வருகிறார்.

பின்னர் அங்கிருந்து குண்டு துளைக்காத கார் மூலம் 4.15 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும் பகுதியை வந்தடைகிறார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது. இதைத்தொடர்ந்து 4.20 மணிக்கு பொதுக்கூட்ட மேடைக்கு மோடி வருகிறார். 5.20 மணி வரை பொதுக்கூட்டம் நடக்கிறது.

நெல்லை தொகுதி பா.ஜனதா வேட்பாளர் நயினார் நாகேந்திரன், கன்னியாகுமரி தொகுதி பா.ஜனதா வேட்பாளர் பொன்.ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி தொகுதி த.மா.கா. வேட்பாளர் எஸ்.டி.ஆர்.விஜயசீலன், தென்காசி (தனி) தொகுதி கூட்டணி வேட்பாளரான தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஜான் பாண்டியன் ஆகியோருக்கு அவர் ஆதரவு திரட்டுகிறார்.

**காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே**

இதேபோல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இன்று (திங்கட்கிழமை) புதுச்சேரி, கடலூர், விழுப்பும் நாடாளுமன்ற தொகுதிகளில் பிரசாரம் மேற்கொள்ள இருக்கிறார். இதற்காக புதுச்சேரிக்கு இன்று காலை 11 மணிக்கு வரும் மல்லிகார்ஜுன கார்கேவை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வரவேற்க உள்ளார்.

**முதல்மைச்சர் மு.க.ஸ்டாலின்**

இதேபோல், தமிழகம் முழுவதும் பிரசாரத்தை முடித்துகொண்டு தலைநகர் சென்னைக்கு திரும்பியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திருவள்ளூர் காங்கிரஸ் வேட்பாளர் சசிகாந்த் செந்தில், வடசென்னை தி.மு.க. வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோருக்கு ஆதரவு திரட்டுகிறார்.

**அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி**

இதேபோல், அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியும் இன்று மத்திய சென்னை தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் பார்த்தசாரதி, தென்சென்னை தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் ஜெயவர்தன் ஆகியோருக்கு வாக்கு சேகரிக்கிறார்.

**மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத்சிங்**

இதேபோல் மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத்சிங், நாளை (செவ்வாய்க்கிழமை) சென்னை தாம்பரம், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நடைபெறும் பொதுக் கூட்டம் மற்றும் வாகன பேரணியில் பங்கேற்று பா.ஜனதா கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுகிறார்.

நாளை காலை 10.30 மணிக்கு கிருஷ்ணகிரி புதிய பஸ்நிலையம் அண்ணா சிலை அருகே நடைபெறும் பொதுக்கூட்டத்தில் ராஜ்நாத்சிங் பங்கேற்று கிருஷ்ணகிரி பா.ஜனதா வேட்பாளர் நரசிம்மனை ஆதரித்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகிறார்.

பொதுக்கூட்டம் முடிந்ததும் ஹெலிக்கொப்டர் மூலம் சென்னை வருகிறார். மதியம் 1.20 மணிக்கு சென்னை கிண்டியில் உள்ள லீ மெரிடியன் ஓட்டலில் சமுதாய தலைவர்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

இதன்பின்பு, ஹெலிக்கொப்டர் மூலம் திருவண்ணாமலை செல்கிறார். மாலை 4.20 மணிக்கு திருவண்ணாமலை தொகுதி பா.ஜனதா வேட்பாளர் அஸ்வத்தாமனை ஆதரித்து நடைபெறும் வாகன பேரணி நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும் மீண்டும் ஹெலிக்கொப்டர் மூலம் சென்னை வருகிறார். தாம்பரம் மார்க்கெட் சாலையில் இரவு 7 மணிக்கு நடைபெறும் பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று ஸ்ரீபெரும்புதூர் த.மா.கா. வேட்பாளர் வேணுகோபாலுக்கு ஆதரவு திரட்டுகிறார்.

**வி.கே.சிங்**

இதேபோல் மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் விமான போக்குவரத்துத்துறை இணை மந்திரி வி.கே.சிங், பா.ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து சென்னையில் இன்று (திங்கட்கிழமை) பிரசாரம் செய்கிறார்.

காலை 9 மணி முதல் 11 மணி வரை தென்சென்னை பா.ஜனதா வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு ஆதரவு திரட்டுகிறார். மாலை 4 மணிக்கு வட சென்னை திரு.வி.க.நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில்பங்கேற்று வட சென்னை பா.ஜனதா வேட்பாளர் பால்கனகராஜுக்கு ஆதரவு திரட்டுகிறார்.

மாலை 6.30 மணிக்கு ஆவடியில், திருவள்ளூர் பா.ஜனதா வேட்பாளர் பொன்.பாலகணபதியை ஆதரித்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார்.

**நாளை மறுநாள் பிரசாரம் ஓய்கிறது**


நாளை (செவ்வாய்கிழமை) முதஅமைச்சர் மு.க.ஸ்டாலின், காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார்.

வரும் 17ஆம்திகதி புதன்கிழமை மாலை 5 மணியுடன் தமிழகத்தில் பிரசாரம் ஓய்கிறது.

தேர்தல் நாளான 19 ஆம் திகதி காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்க இருக்கிறது.

# இஸ்ரேலின் பதிலடி நடவடிக்கையில் பங்களிக்கவே மாட்டாது அமெரிக்கா!

## டெல்அவிவுக்கு வொஷிங்டன் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



வொஷிங்டன், ஏப்.15

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் நடக்கும் மோதலில் ஈரானின் தாக்குதல்களில் இருந்து இஸ்ரேலுக்குக் பாதுகாப்புக் கவச நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அனெரிக்கா இஸ்ரேல் செய்யும் எந்தவொரு பதிலடியிலும் தாங்கள் ஒரு பகுதியாக இருக்க மாட்டார்கள் என்று அறிவித்து விட்டது.

சிரியா தலைநகர் டமாஸ்கசில் உள்ள ஈரான் நாட்டின் தூதரகம் மீது இஸ்ரேல் இந்த மாத தொடக்கத்தில் வான்தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஈரான் இராணுவ தளபதிகள் 2 பேர் உள்பட 12 பேர் கொல்லப்பட்டனர்.

இதனால் ஈரான் கடும் கோபமடைந்தது. இந்த தாக்குதலுக்காக இஸ்ரேலுக்கு எந்த நேரத்திலும் தக்க பதிலடி கொடுப்போம் என ஈரான் சூளுரைத்தது. இதனால் இருநாடுகளுக்கும் இடையில் பதற்றமான சூழல் நீடித்து வந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் ஈரான் நாட்டின் மீது நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் டிரோன்களை வீசி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. ஒரே நேரத்தில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட டிரோன்கள், நீண்ட தூர மற்றும் நடுத்தர ஏவுகணைகளை இஸ்ரேலை நோக்கி ஈரான் வீசியது.

எனினும் பெரும்பாலான ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் நடுவானிலேயே இடைமறித்து அழிக்கப்பட்டன. இதனால் உயிர் சேதம் போன்ற பெரும் அசாம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டது. இருந்த போதிலும் ஒரு சில ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பையும் கடந்து உள்ளே நுழைந்தன. அவை தெற்கு இஸ்ரேலில் உள்ள விமானப்படை தளம் உள்ளிட்ட இடங்களைத் தாக்கின. இதில் சிறிய அளவிலான சேதங்கள் ஏற்பட்டன எனத் ர்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் உடனடியாக இஸ்ரேலுக்கு ஆதரவாக களத்தில் இறங்கின. இஸ்ரேலை நோக்கி வீசப்பட்ட டிரோன்களை அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் படைகள் இடைமறித்து அழித்தன.

இஸ்ரேல் மீதான தாக்குதலைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். மேலும் அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர் இஸ்ரேலின் மக்களையும், அங்குள்ள அமெரிக்க வீரர்களையும் அமெரிக்கா இரும்புக் கவசம் கொண்டு பாதுகாக்கும் என உறுதியளித்தார்.

இதனிடையே இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில் வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானுக்கு எதிரான எந்தவொரு இஸ்ரேலிய எதிர் தாக்குதலிலும் அமெரிக்கா இணையாது என்று வெள்ளை மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகையின் உயர்மட்ட தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், "இஸ்ரேல் தன்னைத் தற்காத்துக் கொள்ள அமெரிக்கா தொடர்ந்து உதவும். ஆனால் போரை விரும்பவில்லை என்று கூறினார்.

மேலும் இதுகுறித்து ஜோ பைடன் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறுகையில், "இஸ்ரேல் செய்யும் எந்தவொரு பதிலடியிலும் நாங்கள் ஒரு பகுதியாக இருக்க மாட்டோம். நாங்கள் அத்தகைய செயலில் பங்கேற்பதை கற்பனை செய்து பார்க்க மாட்டோம். இஸ்ரேல் சூழ்நிலைக்கேற்ப தந்திரோபாயமாக தீர்மானங்களை எடுக்க வேண்டும்" – என்று தெரிவித்தார்.

# ஆப்கானில் வெள்ளத்தில் சிக்கி 3 நாள்களில் 33 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் பருவகால மழையினால் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் சிக்கி 3 நால்களில் குறைந்தது 33 பேர் உயிரிழந்தனர். மேலும் 27 பேர் காயமடைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக இயற்கைப் பேரிடர் மேலாண்மைக்கான மாநில அமைச்சகத்தின் தலிபான் செய்தித் தொடர்பாளர் அப்துல்லா ஜனன் சைக் கூறுகையில், தலைநகர் காபூல் மற்றும் பல மாகாணங்களில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இதில் 600க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. 200 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இந்த வெள்ளத்தால் சுமார் 800 ஹெக்டேர் விவசாய நிலங்களும், 85 கிலோ மீட்டர் (53 மைல்) சாலைகளும் சேதமடைந்துள்ளன. மேற்கு பரா, ஹெராத், தெற்கு ஜாபுல் மற்றும் காந்தஹார் ஆகிய மாகாணங்கள் அதிக சேதங்களை சந்தித்துள்ளன. – என்றார்.

மேலும் ஆப்கானிஸ்தானின் 34 மாகாணங்களில் வரும் நாள்களில் அதிக மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

திங்கட்கிழமை 15/04/2024

## டொரன்டோ விபத்தில் முதியவர் உயிரிழப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 15

டொரன்டோ பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் 60 வயதான முதியவர் ஒருவர் உயிரிழந்தார். C2



# இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதலினால் மத்திய கிழக்கின் ஸ்திரத்தன்மை பாதிப்பு

## ஜி7 நாடுகள் கூட்டாகத் தெரிவிப்பு

**ஒன்ராரியோ,ஏப்ரல்15**

**இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்கு தல் மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்திரத்தன்மையின்மையை மேலும் மோசமடையச் செய்யும் என கனடா உள்ளடங்கலாக ஜி7 நாடுகள் தெரிவித்துள்ளன.**

கட்டுப்படுத்தமுடியாத பிராந்திய தூண்டல் என ஜி7 நாடுகள் இந்தத் தாக்குதலை குறிப்பிட்டுள்ளன.

ஏழு நாடுகளின் தலைவர்களும் இந்தத் தாக்குதலை கடுமையான கண்டிக்கின்றனர் எனவும், நேரடியான மற்றும் எதிர்பாராத தாக்குதல் எனவும் விளக்கியுள்ளனர்.

இஸ்ரேலுக்கும், அதன் மக்களுக்கும் தமது முழுமையான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை வழங்குவதாகவும், பாதுகாப்பினை நோக்கித் தமது உறுதிப்பாட்டினை கொண்டிருப்பதாகவும் ஜி7 நாடுகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்கும், நிலைமை மேலும் மோசமடையாதிருப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நச்சுப் போதைப்பொருள் பவனையால் பிரிட்டிஷ் கொலம்பியாவில் நெருக்கடி

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 15

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் அவசர கால நிலைமையை பிரகடனம் செய்து எட்டு வருடங்கள் ஆகுவதாக மாகாண முதல்வர் டேவிட் எபி தெரிவித்துள்ளார்.

நச்சுப் போதைப்பொருள் நெருக்கடியானது குடும்பங்களிலும், சமுதாயங்களிலும் பேரழிவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த போதைப்பொருள் பயன்பாட்டினால் தமது உயிரை இழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், சுகாதாரப் பணியாளர்களில் இது பெரும் பணிச்சுமையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். C2





## ஒன்ராரியோவின் தென்பகுதியில்

# வறட்சி,காட்டுத் தீ அச்சுறுத்தல்கள் ஈரலிப்பான காலநிலையால் குறைவு

ஒன்ராரியோ,ஏப்ரல்15

ஒன்ராரியோவின் தென்பகுதியில் ஏப்ரல் மாதத்தில் நீடித்த ஈரலிப்பான காலநிலையானது, வறட்சி மற்றும் காட்டுத் தீ குறித்த அச்சுறுத்தல்களை குறைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் ஒன்ராரியோவில் 25 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகிய அதேவேளை, கேர்க்லேண்ட் அருவி பகுதியில் 62.6 மில்லிமீற்றர் மழை பதிவாகியிருந்தது.

இதனைத் தவிர எதிர்வரும் வாரத்தின் இறுதியில் ஒன்ராரியோவின் சில பகுதிகளில் பனிப்பொழிவுக்கான வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் ஏப்ரல் 3, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் சுமார் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பொதுவாக ஏப்ரல் மாதத்தில் ஒன்ராரியோவில் சராசரியாக 63 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும், ஆனால், ஒன்ராரியோவில் இந்த மாதம் நிறைவடைவதற்கு முன்னரே 87.3 மில்லிமீற்றர் சராசரி மழைவீழ்ச்சி பதிவாகியிருப்பதாகவும், இது 139 சதவீத வளர்ச்சி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஈரலிப்பான வானிலையானது ஒன்ராரியோவில் வறட்சி மற்றும் காட்டுத் தீக்கான அபாயங்களை குறைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வரவு - செலவுத் திட்டம் நாளை துண்டு விழும் தொகை கூடாது

ஒன்ராரியோ,ஏப்ரல்15

கனடாவின் 2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையில் அதிகரிப்பு காணப்படாது என நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃபிரிலேண்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியான, வரவு - செலவுத் திட்ட சமர்ப்பிப்புக்கு முன்னரான லிபரல் கட்சி உறுப்பினர்களின் நாடளாவிய விஜயத்தைத் தொடர்ந்து நாளை ஏப்ரல் 16ஆம் திகதியன்று வரவு - செலவுத் திட்டம் சமர்பிக்கப்படவுள்ளது.

2023-24ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட துண்டு விழும் தொகையான 40.1 பில்லியன் டொலர்களை விட, இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை அதிகரிக்காதிருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதியமைச்சர் ஃபிரிலேண்ட் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், வீடமைப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டு வருகின்ற நிலையில், நிதியமைச்சரின் இந்த வாக்குறுதி தொடர்பில் பொருளியல் வல்லுநர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசியல்ரீதியாக செல்வாக்கு குறைந்து வருகின்ற நிலையில், லிபரல் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை அதிகரிப்பது, ஆளும் கட்சியின் செல்வாக்கை மேலும் குறைக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### நச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமையானது சுகாதார நெருக்கடியாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

மாகாணத்தில் மனநல மற்றும் அடிமையாதலில் இருந்து பராமரிப்பினை வழங்கும் முறைமைகளை கட்டியெழுப்புவதற்கும், மேம்படுத்துவதற்கும் மாகாணம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

### டொரன்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் செலுத்தி வந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரமாக இருந்த கொங்ரீட் சுவரில் மோதியமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஒக்வூட் பகுதியைச் சேர்ந்த வாகனத்தைச் செலுத்தி வந்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்து குறித்து விவரங்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.






# களவாடப்பட்ட அறுநூறு வாகனங்கள் மொன்ரியல் துறைமுகத்தில் சிக்கின!

## 400இற்கும் மேற்பட்ட கொள்கலன்களைப் பரிசோதித்ததில்

கியூபெக், ஏப்ரல் 15

டிசம்பர் நடுப்பகுதி முதல் மார்ச் மாதத்தின் இறுதி வரை மொன்ரியல் துறைமுகத்தில் சுமார் 400இற்கும் மேற்பட்ட கொள்கலன்களைப் பரிசோதித்ததில் சுமார் 600 களவாடப்பட்ட வாகனங்கள் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கனடாவின் இரண்டாவது பெரிய துறைமுகமாக கருதப்படும் மொன்ரியல் துறைமுகம் இவ்வாறு களவாடப்பட்ட வாகனங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பயன்படுத்தப்படுவது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கைப்பற்றப்பட்ட 600 வாகனங்களில் 400இற்கும் மேற்பட்டவை டொரன்டோ பெருநகரப் பகுதியைச் சார்ந்தவை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாகனத் திருட்டு மற்றும் கடத்தலை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற போதிலும், நீதிசார் கட்டுப்பாடுகள், போதியளவு ஆள்பலம் இன்மை மற்றும் திட்டமிடப்பட்ட குற்றம் என்பன இதற்கு பெரும் தடையாக இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சூரிய கிரகணம் இடம்பெற்ற போது மிருகங்களின் நடத்தையில் மாற்றம்

## கியூபெக் மிருகக்காட்சி சாலையில் அவதானிப்பு

கியூபெக், ஏப்ரல் 15

கடந்த வாரம் இடம்பெற்ற சூரிய கிரகணத்தின் போது மிருகங்களின் நடத்தையை கியூபெக் மிருகக்காட்சி சாலை பரிசோதித்துள்ளது.

சூரிய கிரகணத்தின் போது முழு இருள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சில மிருகங்கள் வினோத நடத்தையை வெளிப்படுத்தின என கியூபெக் மிருகக்காட்சி சாலை தெரிவித்துள்ளது.

ஜப்பானிய மக்காக்குகள் எனப்படும் குரங்கு வகையானது சூரியனைப் பாரக்காது முதுகு காட்டி அமர்ந்திருந்ததையும், சிவப்பு கழுத்துக் கொண்ட நாரைகள் வழமையை விட மிகவும் அமைதியாக இருந்ததாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கியூபெக் பல்கலைக்கழகத்தின் வானியற்பியல் பேராசிரியர் ஒருவர் மிருகக்காட்சி சாலையின் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு மிருகங்களின் நடத்தை மாற்றங்களை கண்காணிப்பதற்கான ஆலோசனையை வழங்கியுள்ளார்.



சூரிய கிரகணத்தின் போது மிருகங்களின் நடத்தையில் பாரிய மாற்றத்தை அவதானித்ததாக கியூபெக் மிருகக்காட்சி சாலையின் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

விரைவில் இந்த கற்கையின் முழுமையான முடிவுகள் மக்களுக்காக அறிவிக்கப்படவுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.



# தீயிலிருந்து காப்பாற்ற முயன்ற தீயணைப்பு வீரரைத் தாக்கியவர்

## அவர் கைது எனப் பொலிஸார் அறிவிப்பு

ஒன்ராறியோ, ஏப்ரல் 15

டொரன்டோவின் டவுன்டவுன் பகுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் இருந்து காப்பாற்றப்பட்ட நபர், அதிகாரியைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏப்ரல் 14ஆம் திகதி காலை ஜோர்ஜ் ஸ்ட்ரீட் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்து சம்பவத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு டொரன்டோ தீயணைப்புப் படையினருக்கு அழைப்பு கிடைத்துள்ளது.

சம்பவம் இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் ஜன்னலில் தொங்கிக் கொண்டிருந்த நபரை காப்பாற்றி, வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள பொலிஸார், குறித்த நபரை காப்பாற்றும் போது அவர் தீயணைப்புப் படை வீரர் ஒருவரை தாக்கினார் எனவும், அந்தக் குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.



## டொரன்டோ பொதுப் போக்குவரத்துச் சேவையில்

# பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட சந்தேகநபரின் படம் வெளியானது

ஒன்ராறியோ, ஏப்ரல் 15

கடந்த வாரத்தில் டொரன்டோவில் பொதுப் போக்குவரத்துச் சேவையில் இரு பெண்களை பாலியல் பலாத்காரம் செய்த சந்தேகநபரின் படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸாரின் தகவல்களுக்கு அமைய முதலாவது சம்பவம் ஏப்ரல் 11ஆம் திகதி புளோர் ஸ்ட்ரீட் வெஸ்ட் பொது போக்குவரத்து நிறுத்துமிடத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் பெண் ஒருவரை நெருங்கி பாலியல் பலாத்காரம் செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 13ஆம் திகதி குறித்த சந்தேகநபர் மியூசியம் ஸ்டேஷனுக்கு அருகில் மற்றுமொரு பெண்ணிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை அடுத்து விசாரணையைத் தொடர்ந்த பொலிஸார் சி.சி.டி.வி. காட்சிகளின் உதவியுடன் சந்தேகநபரை அடையாளங் கண்டு அவரது படத்தை வெளியிட்டுள்ளனர்.



# வன்கூவர் சானிச் பகுதியில் மலைச் சிங்கம் நடமாட்டம்

கனடாவின் வன்கூவர் சானிச் பகுதியில் மலைச் சிங்கமொன்று சுற்றித் திரிவதாக எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

சானிச் பொலிஸார் இந்த எச்சரிக்கையை விடுத் துள்ளனர். வீடொன்றின் கொல்லைப்புறத்தில் மலைச் சிங்கத்தை கண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்ற போதிலும் மலைச் சிங்கத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த சிங்கம் அடுத்து எங்கு சென்றது என்பது பற்றிய தெரியவில்லை எனவும், இதனால் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மலைச் சிங்கம் பூனை இனத்தைச் சேர்ந்த பெரிய பூனை என்பதுடன் ஆபத்தானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மலைச் சிங்கத்தை எவரேனும் பார்த்தால் உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மலைச் சிங்கத்தை நேரடியாக பார்த்தால் அதன் கண்களை நேரடியாக பார்க்குமாறும், ஆக்ரோசமாக சத்தம் எழுப்புமாறும், பற்களை காண்பிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# இந்திய மாணவன் சுட்டுக் கொலை!

## வன்கூவரில் சம்பவம்







கனடாவில் 24 வயதான இந்திய மாணவன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் மருத்துவ கல்வி பயின்று வரும் அரியானா மாநிலத்தை சேர்ந்த 24 வயதான சிரங் அன்டில் என்ற மாணவனே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கனடாவின் வன்கூவர் நகரில் தங்கி கல்வி பயின்று வரும் சிரங் அன்டில் வெள்ளியன்று வென்கவெர் நகரின் கிழக்கு 55 ஆவது அவன்யூ பகுதியில் தனது அவுடி காரில் பய ணித்துள்ளார்.

அப்பகுதியில் முக்கிய தெருவில் இரவு 11 மணியளவில் சிரங் அன்டில் காரில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டது.

இதையடுத்து, அப்பகுதியை சேர்ந்தவர்கள் பொலிஸ ாருக்குத் தகவல் கொடுத்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் சாலையோரம் நின்றுகொண்டிருந்த சொகுசு காரை பரிசோதித்தனர்.

அப்போது அந்த காரில் சிரங் அன்டில் துப்பாக்கி குண்டு பாய்ந்து இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தமையைக் கண்டுபிடித்தனர். இதையடுத்து சிரங்கின் உடலை கைப்பற்றிய பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், சிரங்கை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது யார்? அல்லது சிரங் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டாரா? உள்பட பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

